**தலைப்பு 157 - தேசிய சக வாழ்வு, கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன தேசிய சக வாழ்வு, கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 157 – தேசிய சக வாழ்வு, கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 செப்தெம்பர் 12 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தேசிய சக வாழ்வு, கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 127 இன் ஏற்பாடுகள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | 1. | செயல்நடவடிக்கை திட்டம் உரிய முறையில் தயாரிக்கப்பட்டிராமை. | 2.1.1 |
| | | 2. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் | 2.1.3 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 3. | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை. | 2.9 |
| | | 4. | முகாமைத்துவ நலிவுகள் | 2.5 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் தாப்பிக்கும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | 1. | இணங்காமைகள் | 2.10 |
| | | 2. | மனித வள முகாமைத்துவத்தில் பலவீனங்கள் | 2.11 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையில் அமைச்சில் பரிசீலனைக்கு உட்படுத்தல். | 1. | பணிகள் நிறைவேற்றப்படாமை. | 2.1.2 |
| | | 2. | பெறுகை நடைமுறையை நடைமுறைப்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.2.1 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | 1. | வாகனப் பயன்பாட்டிலான குறைபாடுகள் | 2.3(அ)(i)(ii) |
| | | 2. | விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள். | 2.3(ஆ) |
| | | 3. | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான பிணை | 2.12 |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு | 1. | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளமை. | 2.4 |

| | | | | |
|---|---|---|---|---|
| | முன்னர் அமைச்சின் போது பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல் | 2. | கட்டுநிதிக் கணக்கிலான குறைபாடுகள் | 2.8 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | | ஒதுக்கீடு செய்த ஏற்பாடுகளைப் பயன்படுத்தாமை | 2.6 |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை உரிய கவனத்துடன் செயற்பட்டு அமைச்சின் பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் | | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் | 2.7 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம்வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

### 2.1 செயலாற்றல்

### 2.1.1 திட்டமிடல்

(i) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் தேவைப்பாடுகளுக்கமைய 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் போது 04 பிரதான பணிப்பொறுப்புக்களின் கீழ் நிறைவேற்றப்பட வேண்டிய 30 பணிகளுக்காக தயாரிக்கப்பட்டிருந்த ரூபா 75.6 மில்லியன் தொகையான ஆரம்ப செயல்நடவடிக்கைத் திட்டம் ரூபா 300 மில்லியன் வரை இரு சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டிருந்தது.

(ii) அனைத்து மதக்கூட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடும் போது தேவைப்பாடுகள் உரிய முறையில் திட்டமிப்படாமையால் மேலதிக கதிரைகள் மற்றும் மேசைகளுக்காக ரூபா 489,727 தொகையான மேலதிக கிரயமொன்றை மேற்கொள்ள நேர்ந்திருந்தது.

### 2.1.2 பணிகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பணிகள் நிறைவேற்றப்படாமை**

திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்காக 30 பணிகள் நிறைவேற்ற வேண்டியிருந்த போதிலும், அவற்றுள் 17 பணிகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தன. அவ்வாறு நிறைவேற்றப்படாத 13 பணிகளுக்காக ரூபா 97.37 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஆ) உத்தேச அடைவு மட்டத்தினை அடையப்பெற்றிராமை**

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய 17 பணிகளுக்காக ரூபா 123.8 மில்லியன் தொகையான நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், மொழிகள் உரிமை பிரிவின் 02 பணிகளுக்காகவும் சகவாழ்வு பிரிவின் 05 பணிகளுக்காகவும் ரூபா 32.08 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமையால் உத்தேச அடைவு மட்டத்தை கைப்பற்ற முடியாதிருந்தது.

### 2.1.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் பணிப்பொறுப்புக்கள் தொடர்பில் அக்கறை காட்டும் தரப்பொன்றாக அரச மொழிகள் ஆணைக்குழு, அரச மொழிகள் திணைக்களம் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பான தேசிய செயலகம் ஆகியன இனங்காணப்பட்டிருந்த போதிலும், அந்த அக்கறை காட்டும் தரப்பினரை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான பயிற்சிகளிலும் உத்தியோகத்தர்கள் இல்லாதிருந்தமையால் குறிப்பான புள்ளி விபர குறிகாட்டிகளை இனங்காணுதல் சிக்கலுக்குரியதாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 2.2 பெறுகை நடைமுறையினூடாக வழங்கல்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளல்

அமைச்சினால் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக்கமைய செயற்பட்டவாறு வழங்கல்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன், ரூபா 67.91 மில்லியன் தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 59.01 மில்லியன் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறு.

| செலவின விடயம் | செலவின விடயம் தொடர்பான விபரம் | மேற்கொள்ளப்பட்ட தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு |
|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| | **வழங்கல்** | | | |
| 1201 | - எழுதுகருவி மற்றும் அலுவலக தேவைப்பாடுகள் | 3.60 | 3.39 | 0.21 |
| 1203 | - உணவு மற்றும் சீருடை | 0.21 | 0.14 | 0.07 |
| | **மூலதனச் சொத்துக்களை கைப்பற்றல்** | | | |
| 2101 | - வாகனங்கள் | 43.00 | 39.98 | 3.02 |
| 2102 | - தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 15.50 | 12.91 | 2.59 |
| 2103 | - இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் | 5.60 | 2.59 | 3.01 |
| | **மொத்தம்** | **67.91** | **59.01** | **8.90** |

### 2.2.1 பெறுகை நடைமுறையினை அமுல்படுத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாடடிக் கோவையின் 4.3.1(அ) வழிகாட்டியின் பிரகாரம் அனைத்து சார்ந்த செலவினங்கள் உள்ளடங்கலாக மொத்த மதிப்பீடொன்று பெறுகை நிறுவனத்தினால் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், சகவாழ்வு சங்கங்களுக்காக ரூபா 11.97 தொகையான கெனபி கூடாரங்களை கொள்வனவு செய்தல், சகவாழ்வு சங்கங்களுக்காக ரூபா 5.43 மில்லியன் பெறுமதியான கதிரைகளை கொள்வனவு செய்தல், ரூபா 11.23 மில்லியன் தொகையான "People of Srilanka" நூலை மக்கள் மயப்படுத்தும் விழா மற்றும் ரூபா 6.25 மில்லியன் செலவிடப்பட்டு சர்வ மத மாநாட்டினை

நடாத்துதல் போன்ற 04 பெறுகைகள் தொடர்பில் தேவையான மொத்தக் கிரய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.6.1(அ), (II) மற்றும் (IV) வழிகாட்டிகளினூடாக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக்களின் பொறுப்பு மற்றும் பணிப்பொறுப்பு ஆகியன சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ரூபா 23.65 மில்லியன் கூட்டுத்தொகையான சகவாழ்வு சங்கங்களுக்கான கெனபி கூடாரங்கள் மற்றும் கதிரைகள் கொள்வனவு செய்யும் போது அனைத்து மத கூட்டத்தினை நடாத்துவதற்கான 03 பெறுகைகள் தொடர்பில் வழிகாட்டிகளிலிருந்தான விலகல்கள் அவதானிக்கப்பட்டன.

**(இ) சகவாழ்வு சங்கங்களுக்காக 300 கெனபி கூடாரங்களை கொள்வனவு செய்தல்**

---

இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் பெறுகைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிராத ஒப்பந்தப் பெறுமதி ரூபா 11.97 மில்லியனான 300 கெனபி கூடாரங்களை கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கையின் போது அமைச்சரின் சிரேஷ்ட உதவி செயலாளரினால் பரிந்துரைக்கப்பட்ட 6 நிறுவனங்கள் உள்ளடங்கலாக 10 நிறுவனங்களிலிருந்து விலைக் கேள்விகள் கோரப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதனை உறுதிப்படுத்துவதற்கு எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. 02 நிறுவனங்களிலிருந்து மாத்திரம் கூறுவிலைகள் முன்வைக்கப்பட்டமையால், தெரிவு செய்யப்பட்ட விநியோக நிறுவனம் பரிந்துரைக்கப்பட்ட 06 நிறுவனங்களில் ஒன்றானமையால் 2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 1.2 இன் பிரகாரம் உச்ச போட்டித்தன்மை மற்றும் வெளிப்படுதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் செயற்பட்டிருக்கவில்லை.

(ii) ஒப்பந்த தரவு பத்திரத்தின் 18 ஆம் இலக்கத்திற்கமைய கெனபி கூடாரங்களின் உற்பத்தி, விநியோகம் மற்றும் பொருத்துதல் தொடர்பில் ஆகக்குறைந்தது 03 வருட அனுபவம் காணப்பட வேண்டிய போதிலும், தெரிவு செய்யப்பட்ட விலைக்கேள்வியாளர் இந்த தேவைப்பாட்டினை பூர்த்தி செய்திருக்கவில்லை.

(iii) உடன்படிக்கையின் 26 ஆம் இலக்கத்திற்கமைய 300 கெனபி கூடாரங்கள் 2017 நவம்பர் 18 ஆந் திகதி உற்பத்தி செய்து பகிர்ந்தளித்தல் வழங்கல் நிறுவத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டியதாக காணப்பட்டது. 2018 பெப்ரவரி 16 ஆந் திகதிய வரையிலும் 100 கெனபி கூடாரங்கள் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்த காரணத்தால் எஞ்சிய 200 கெனபி கூடாரங்களை உற்பத்தி செய்யும் பணிகள் 2018 ஏப்ரல் 19 ஆந் திகதி இரத்துச் செய்யப்பட்டிருந்தன. உடன்படிக்கையின் பிரகாரம் தாமத காலத்திற்காக கட்டணங்களை அறவிடல் தொடர்பில் தேவையான நிதியேற்பாடுகள்

ஏற்பாடு செய்யப்பட்டிராமையால் தாமதக் கட்டணங்களை அறவிட முடியாத நிலைமையொன்று உருவாகியிருந்தது.

## 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) வாகனங்களின் பயன்பாடு

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் இறுதியளவில் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு 18 வாகனங்கள் காணப்பட்டதுடன், அந்த வாகனங்களில் 321,488 கிலோ மீட்டர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அவற்றுக்கான எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய் ஆகியவற்றுக்காக ரூபா 4.13 மில்லியனும், வாகனங்களை சேவைப்படுத்தலுக்காக ரூபா 1.03 மில்லியனும், வாகன பழுதுபார்த்தலுக்காக ரூபா 10.52 மில்லியனும், வாகன காப்பீட்டுக்காக ரூபா 1.89 மில்லியனுமாக ரூபா 17.55 மில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய அமைச்சினால் வாகனங்களை ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்காக (சாரதி) சம்பளம் மற்றும் படிகள் நீங்கலாக) ஒரு கிலோ மீட்டருக்கான செலவினம் ரூபா 28.24 முதல் ரூபா 89.91 ஆன வீச்சினை கொண்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (i) எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்படாமை

2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சிற்கு சொந்தமான 13 வாகனங்களில் எரிபொருள் எரிவானது சிக்கனமாக இடம்பெறுவதாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### (ii) வாகனங்களை புதுப்பித்தல்

2001 ஆம் ஆண்டின் போது சனாதிபதி செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த டிபென்டர் வாகனமொன்று 2017 மே 24 ஆந் திகதி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்த வாகனத்திற்காக 2017 செப்தெம்பர் மாதத்தின் போது பாரியதாரு பழுதுபார்த்தலுக்காக ரூபா 1.43 மில்லியன், சிறு பழுதுபார்த்தலுக்காக ரூபா 0.22 மில்லியனும், சேவைப்படுத்தலுக்காக ரூபா 25,389 தொகையும் எரிபொருளுக்காக ரூபா 4,750 ஆக ரூபா 1.68 மில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டு செப்தெம்பர், ஒக்தோபர் மாதங்களில் 10 நாட்களில் 1,117 கிலோமீட்டர்கள் மாத்திரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மீண்டும் 2018 சனவரி மாதத்தின் போது பழுதுபார்த்தல் செலவினமாக ரூபா 1.26 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

**(ஆ) விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுடைய சொத்துக்கள்**

சமூக மற்றும் கூட்டிணைந்த செயற்திட்டங்களுக்காக இலகுபடுத்தும் செயற்திட்டத்தின் (FLICT) நிதியேற்பாடுகளில் கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்கள், கணனி இயந்திரங்கள் மற்றும் கணனி மென்பொருட்கள் போன்ற சொத்துக்கள் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 89 உருப்படிகள் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. இந்த சொத்துக்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு புத்தகங்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள்**

**(அ) வருடாந்த பாதீட்டு எல்லையினை விஞ்சி கடப்பாடுகள் ஏற்படுத்திக்கொள்ளப்படுகின்றமை**

2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 02(அ) பந்திக்கு முரணாக 03 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 7.66 மில்லியன் நிதியேற்பாடு ரூபா 2.05 மில்லியனால் விஞ்சி ரூபா 2.07 மில்லியனுக்கான கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**(ஆ) பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்படாமை**

2017 ஆம் ஆண்டிற்கான தேசிய கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 29.5 மில்லியன் தொகையான பொறுப்புக்களில் பெறுமதி வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.5 முகாமைத்துவ நலிவுகள்**

அரச உத்தியோகத்தர்களால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய அரச கரும மொழி நிபுணத்துவத்தை அதிகரிக்கும் நோக்கில் அரச நிறுவனங்களில் கோரப்பட்டிருந்த சிங்கள எழுத்துப் பயிற்சி புத்தகங்களின் தேவைப்பாட்டிற்காக ஒவ்வொன்றும் ரூபா 1,047.75 படி 500 புத்தகங்கள் ரூபா 523,875 தொகை செலவில் அச்சிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இது வரையிலும் அமைச்சின் கீழான அரச மொழிகள் திணைக்களத்தினாலும் அச்சிடப்பட்டிருந்த அதே புத்தகத்தின் 4,919 பிரதிகள் காணப்பட்டது. 2018 ஆகஸ்ட் மாதமளவில் அமைச்சினால் அவ்வாறு அச்சிடப்பட்ட 500 புத்தகங்களில் 200 புத்தகங்களின் இருப்பொன்று எஞ்சியிருந்தது.

**2.6 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியினுள் அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 245.18 | 193.99 | 51.20 | 20.88 |
| | மூலதனம் | 189.23 | 136.74 | 52.49 | 27.74 |
| | **மொத்தம்** | **434.41** | **330.72** | **103.69** | **23.87** |
| **2014** | மீண்டுவருபவை | 241.97 | 231.46 | 10.51 | 4.35 |
| | மூலதனம் | 231.12 | 151.93 | 79.20 | 34.26 |
| | **மொத்தம்** | **473.09** | **383.38** | **89.71** | **18.96** |
| **2015** | மீண்டுவருபவை | 287.07 | 260.68 | 26.39 | 9.19 |
| | மூலதனம் | 305.30 | 145.25 | 160.07 | 52.43 |
| | **மொத்தம்** | **592.37** | **405.91** | **186.45** | **31.48** |
| **2016** | மீண்டுவருபவை | 363.25 | 327.39 | 35.86 | 9.87 |
| | மூலதனம் | 309.01 | 124.72 | 184.30 | 59.64 |
| | **மொத்தம்** | **672.27** | **452.11** | **220.16** | **32.75** |
| **2017** | மீண்டுவருபவை | 401.18 | 359.68 | 41.49 | 10.34 |
| | மூலதனம் | 502.74 | 258.19 | 244.55 | 48.64 |
| | **மொத்தம்** | **903.92** | **617.87** | **286.05** | **31.65** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான 05 வருட காலப்பகுதியினுள் மூலதன நிதியேற்பாட்டின் பயன்படானது 40 சதவீதம் முதல் 66 சதவீதம் வரையான வீச்சளவினை கொண்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமை**

03 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1.1 மில்லியனான மொத்த தேறிய நிதியேற்பாட்டில் எந்தவிதமான பயன்பாடுமின்றி முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

**(ii) மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளமை**

18 செலவின விடயங்களுக்காக ரூபா 474.74 மில்லியன் கூட்டுத்தொகையான மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், அந்த செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாடுகளின் ரூபா 221.86 மில்லியன் கூட்டுத்தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமையால், சேமிப்பானது ஏற்பாடு செய்யப்பட்ட தேறிய நிதியேற்பாட்டில் 21 சதவீதம் முதல் 93 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

**2.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 15701 விடய இலக்கத்தின் கீழான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் பின்வருமாறு.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளவாறானது** |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 18.00 | 15.19 | 5.00 | 8.88 | 50.00 | 36.88 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிலுவைக் கடன் மீதிகள் அறவிடப்படாமை**

கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட இணக்கக்கூற்றிற்கமைய 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 36,880,600 தொகையான மொத்த கடன் மீதியினுள் ரூபா 318,462 கூட்டுத்தொகையான 04 கடன் மீதிகள் 01 வருடம் முதல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டன. அந்த கடன் மீதிகளை அறவீடு செய்யம் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

**2.8 கட்டுநிதிக் கணக்கு**

மீளாய்வாண்டின் போது கட்டுநிதிக்காக ரூபா 607.032 மில்லியன் கோரப்பட்ட போதிலும், ரூபா 318.48 மில்லியன் மாத்திரம் கிடைத்திருந்தது. அதனால், ரூபா 288.55 மில்லியன் கட்டுநிதி கிடைக்காமையால் திட்டமிடப்பட்ட பணிகளை மீளாய்வாண்டினுள் நிறைவேற்ற முடியாதிருந்தது.

## 2.9 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

அமைச்சினால் கீழே குறிப்பிடப்படும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | பிணைகள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| (ஆ) | அடியிதழ் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 |
| (இ) | தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் வரவுப் பதிவேடு | 2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி |

## 2.10 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

1987 இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் 6(1)(அ) உப பிரிவிற்கமைய, ஒப்பந்தக் கிரயம் ரூபா 5.00 மில்லியனை விஞ்சுமாயின் அனைத்து ஒப்பந்தகாரர்களும் பொது ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டியதுடன், ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட பின் 60 நாட்களினுள் ஒப்பந்த உடன்படிக்கை பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், மேற்படி எல்லையினை விஞ்சிய ரூபா 34.88 மில்லியன் கூட்டுப் பெறுமதியுடைய 04 ஒப்பந்தங்கள் தொடர்பில் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.11 மனிதவள முகாமைத்துவம்

### ஆட்சேர்க்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளனி வேதனம் ஆகியவற்றுக்கான செலவினம்

அமைச்சினால் தமது கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்கான தனிநபர் ஊதிய செலவின தொகுதிக்காக ரூபா 191.42 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, நபருக்கான செலவினம் ரூபா 0.54 மில்லியனாக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 25 | 10 | 15 |
| (ii) | இரண்டாம் மட்டம் | 06 | 04 | 02 |
| (iii) | மூன்றாம் மட்டம் | 436 | 250 | 186 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 105 | 91 | 14 |
| | **மொத்தம்** | **572** | **355** | **217** |

**பதவியணியை பயிற்றுவித்தல்**

---------------------------------------------------

பதவியணியை உரிய முறையில் பயிற்றுவிக்கும் தேவைப்பாடொன்று காணப்படுகின்றமையால், அமைச்சினால், அதன் பதவியணியை பயிற்றுவிப்பதற்காக ரூபா 0.97 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது எந்தவிதமான பயிற்சியையும் பெற்றிராத உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 241 ஆகும். உள்ளபடியான பதவியணி மற்றும் ஒப்பிடப்பட்ட எவ்வித பயிற்சியையும் பெற்றிராத உத்தியோகத்தர்களின் சதவீதம் 68 சதவீதம் ஆகும்.

**2.12 அரச உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்**

------------------------------------------------------------------------------

அமைச்சின் நிதி பொறுப்பேற்றல் மற்றும் பொறுப்பாக இருக்கும் உத்தியோகத்தர்கள் மற்றும் களஞ்சியத்திற்கு பொறுப்பாக செயற்படும் உத்தியோகத்தர்களால் நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய பிணை வைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.